# பெரியாழ்வார் திருமொழி 4-5
## ஆசைவாய்

(பகவானிடத்தில் ஈடுபடாமல் இருக்கும் ஸம்ஸாரிகளுக்கு
ஹிதோபதேசம் செய்தல்)

371 * ஆசை வாய்ச் சென்ற சிந்தையராகி *
அன்னை அத்தன் என் புத்திரர் பூமி *
வாசவார் குழலாள் என்று மயங்கி *
மாளுமெல்லைக் கண்வாய் திறவாதே **
கேசவா புருடோத்தமா என்றும் *
கேழலாகிய கேடிலீ என்றும் *
பேசுவார் அவர் எய்தும் பெருமை *
பேசுவான் புகில் நம்பரமன்றே (1)

372 சீயினால் செறிந்தேறிய புண் மேல் *
செற்றலேறிக் குழம்பிருந்து எங்கும் *
ஈயினால் அரிப்புண்டு மயங்கி *
எல்லைவாய்ச் சென்று சேர்வதன் முன்னம் **
வாயினால் நமோ நாரணாவென்று *
மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி *
போயினால் பின்னை இத்திசைக்கு என்றும் *
புணைக் கொடுக்கிலும் போகவொட்டாரே (2)

373 சோர்வினால் பொருள் வைத்ததுண்டாகில் *
சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து *
ஆர் வினவிலும் வாய் திறவாதே *
அந்தகாலம் அடைவதன் முன்னம் **
மார்வம் என்பதோர் கோயில் அமைத்து *
மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி *
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு *
அரவதண்டத்தில் உய்யலுமாமே (3)

374 மேலெழுந்ததோர் வாயுக் கிளர்ந்து *
மேல் மிடற்றினை உள்ளெழ வாங்கி *
காலும் கையும் விதிர் விதிர்த்தேறிக் *
கண்ணுறக்கம் அதாவதன் முன்னம் **
மூலமாகிய ஒற்றை எழுத்தை *
மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி *
வேலை வண்ணனை மேவுதிராகில் *

விண்ணகத்தினில் மேவலுமாமே (4)

375 மடி வழி வந்து நீர்ப் புலன் சோர *
வாயிலட்டிய கஞ்சியும் மீண்டே *
கடை வழிவாரக் கண்டம் அடைப்பக் *
கண்ணுறக்கம் அதாவதன் முன்னம் **
தொடை வழி உம்மை நாய்கள் கவரா *
சூலத்தால் உம்மைப் பாய்வதும் செய்யார் *
இடை வழியில் நீர் கூறையும் இழவீர் *
இருடீகேசன் என்றேத்த வல்லீரே (5)

376 அங்கம் விட்டவை ஐந்தும் அகற்றி *
ஆவி மூக்கினில் சோதித்த பின்னை *
சங்கம் விட்டவர் கையை மறித்துப் *
பையவே தலை சாய்ப்பதன் முன்னம் **
வங்கம் விட்டுலவும் கடற்பள்ளி மாயனை *
மதுசூதனனை மார்பில்
தங்க விட்டு வைத்து * ஆவதோர் கருமம்
சாதிப்பார்க்கு * என்றும் சாதிக்கலாமே (6)

377 தென்னவன் தமர் செப்பமிலாதார் *
சேவதக்குவார் போலப் புகுந்து *
பின்னும் வன்கயிற்றால் பிணித்தெற்றிப் *
பின் முன்னாக இழுப்பதன் முன்னம் **
இன்னவன் இனையான் என்று சொல்லி *
எண்ணி உள்ளத்திருளற நோக்கி *
மன்னவன் மதுசூதன் என்பார் *
வானகத்து மன்றாடிகள் தாமே (7)

378 கூடிக்கூடி உற்றார்கள் இருந்து *
குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து *
பாடிப்பாடி ஓர் பாடையில் இட்டு *
நரிப்படைக்கு ஒருபாகுடம் போலே **
கோடிமூடி எடுப்பதன் முன்னம் *
கௌத்துவமுடைக் கோவிந்தனோடு *
கூடியாடிய உள்ளத்தரானால் *
குறிப்பிடம் கடந்து உய்யலுமாமே (8)

379 வாயொரு பக்கம் வாங்கி வலிப்ப *

வார்ந்த நீர்க் குழிக்கண்கள் மிழற்ற *
தாய் ஒருபக்கம் தந்தை ஒருபக்கம் *
தாரமும் ஒருபக்கம் அலற்ற **
தீ ஓருபக்கம் சேர்வதன் முன்னம் *
செங்கண்மாலொடும் சிக்கெனச் சுற்ற
மாய் * ஒருபக்கம் நிற்க வல்லார்க்கு *
அரவதண்டத்தில் உய்யலுமாமே (9)

380 * செத்துப் போவதோர் போது நினைந்து *
செய்யும் செய்கைகள் தேவபிரான் மேல் *
பத்தராய் இறந்தார் பெறும் பேற்றைப் *
பாழித்தோள் விட்டுசித்தன் புத்தூர்க் கோன் **
சித்தம் நன்கொருங்கித் திருமாலைச் *
செய்த மாலை இவை பத்தும் வல்லார் *
சித்தம் நன்கொருங்கித் திருமால் மேல் *
சென்ற சிந்தை பெறுவர் தாமே (10)